# பிடபெத்தர பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பிடபெத்தர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3..1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 10 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய ரூபா 30,560,772 தொகை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளில் போலவே மூலதன உதவி மற்றும் மூலதன செலவுகள் கணக்குகளில் இருந்தும் கைவிடுபட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியம் மற்றும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 1,427,035 தொகைக்கான செலவுகளின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளின் பெறுமதி நிலையான சொத்துக்கள் என மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் சபையின் பெக்கோ இயந்திரத்தை பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 45,000 இற்கான தொகை மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக மூலதனச் செலவுகள் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கடந்த ஆண்டு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,384,242 இற்கான முத்திரை கட்டண வருமானம், சரி செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 283,500 நிலுவை குப்பைவரி வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) கடந்த ஆண்டு மூலதன செலவுகள் என மிகையாக கணக்கீடு செய்திருந்த ரூபா 1,225,940 இற்கான தொகை சரி செய்யும் போது இது இரட்டிப்பாகியுள்ளது.

(எ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 2,950,168 தொகை பெறுமதியான 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 211,846 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 03 நாட்குறிப்புக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 132,030 தொகை வரவு மற்றும் செலவு பதிவுகள் மாற்றமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற 16 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 45,095,999 தொகையாகும்.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 38,613,411 தொகைக்கான பலவின கடன்பற்றோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 24,782,274 தொகைக்கான மீதி அடங்கியிருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 40,365,979 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 25,744,847 தொகைக்கான மீதி அடங்கியிருந்தது.

(ii) கடந்த ஆண்டுகளில் இருந்து கொண்டுவந்து காணப்படும் பெறுமதி கூட்டிய வரி கணக்கில் காணப்பட்ட ரூபா 624,939 இற்கான மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 41,821,685 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

#### 1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>(i) நி.பி. 571 | 2 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 919,377 தொகைளை திருப்பி செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் வைப்பு மீதி 83 மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 102 – 112 | 2016 ஜுலை 01 திகதி விபத்துக்குள்ளாகிய வாகனத்தின் விபத்து தொடர்பாக நட்டங்கள் மற்றும் சேதங்கள் அறிக்கை சமர்பித்திருக் காததுடன், வாகனத்தின் பழுதுபார்த்தல் செலவு ரூபா 194,630 தொகை செலுத்தப்பட்டிருந்தது. காப்புறுதி நட்டஈடு கிடைத்த பின்னர் மேலும் காப்புறுதி மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 17,502 தொகை காணப்பட்டது. நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | 2017 ஆண்டிற்கான சபைக்கு சொந்தமான 09 வாகனங்களில் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,503,867 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,368,175 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,158,750 | 1,452,395 | 1,444,348 | 265,441 | 1,040,750 | 1,115,543 | 1,087,682 | 257,394 |
| வாடகை | 4,448,000 | 5,715,998 | 5,256,984 | 1,662,458 | 4,303,000 | 5,391,823 | 5,591,798 | 1,203,444 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 305,100 | 312,923 | 312,923 | 70,522 | 232,100 | 238,287 | 238,287 | 70,522 |
| ஏனைய வரு மானங்கள் | 10,821,000 | 12,134,615 | 9,376,183 | 16,414,597 | 11,282,500 | 14,673,155 | 6,556,234 | 13,656,165 |
| மொத்தம் | 16,732,850 | 19,615,931 | 16,390,438 | 18,413,018 | 16,858,350 | 21,418,808 | 13,474,001 | 15,187,525 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 16,732,850 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 19,615,931 ஆக காணப்பட்டது. ரூபா 15,187,525 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 34,803,456 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 16,390,438 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 18,413,018 ஆக காணப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) வீதவரி**

2010 பெப்ரவரி 28 ஆம் திகதி 1824 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தை சேரந்த 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முன்னேற்றமடைந்துள்ள பிரதேசங்கள் என வெளியிட்டிருந்ததுடன், 2010 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சபையினால் வீதவரி அறவீடு செய்யும் செய்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 256,749 தொகையாக இருந்ததுடன், ரூபா 31,883 தொகைக்கான சிட்டையிடல் உடன் ரூபா 288,632 தொகை அறவிடவேண்டிய காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 23,191 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 265,441 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(இ) நீர்க்கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) ஆரம்ப நிலுவை ரூபா 959,589 தொகை காணப்பட்டதுடன், ரூபா 771,747 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,731,336 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 796,816 தொகை காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 961,520 தொகை நிலுவையாக காணப்பட்டது. 2011 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்ட அலபலாதெனிய நீர் செயற்திட்டத்தில் இருந்து ரூபா 351,171 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) 140 நீர் நுகர்வோர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 373,099 இற்கான நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 391 நீர் நுகர்வோர்கள் உடனடிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. நீர் செயற்திட்டத்திற்காக திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு செலவு சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 2,333,966 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வருமானம் என ரூபா 796,816 மாத்திரம் கிடைத்திருந்தமையினால் நீர் செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு ரூபா 1,537,150 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**2.2.4 வாடகை**

------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை ரூபா 581,139 தொகையான இருந்ததுடன், ரூபா 3,981,993 தொகைக்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 4,563,132 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 3,536,804 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,026,328 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிலுவை தொகையில் 10 தவணைப் பணம் நிலுவையாகவுள்ள கடை உரிமையாளர்கள் 14 பேரிடம் ரூபா 644,152 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அவர்களுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கை செயற்படாத நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) மொறவக்க திங்கள் வாராந்த சந்தை மற்றும் மீன் பலகையை வாடகை கொடுக்கும் கேள்வி 2016 ஆண்டின் போது முறையே ரூபா 1,056,550 மற்றும் ரூபா 772,200 தொகை இருந்தபோதிலும், அத்தொகையை குறைந்த பட்ச விலைமனு என 2017 ஆண்டிற்கு கேள்வி அழைக்கும் போது 2106 ஆண்டை விட முறையே, ரூபா 108,500 இற்கான மற்றும் 810,000 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

--------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,443,470 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,900,606 தொகை காணப்பட்டது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 செயலாற்றுகை**

-----------------------

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்**

------------------------------------------------------------------

2017 ஆண்டின் போது ரூபா 25,098,000 தொகையான பாதிடப்பட்ட 68 வேலைத் திட்டங்கள் சபை நிதியம் மற்றும் ஏனைய ஏற்பாடுகளின் மூலம் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2017 ஆண்டு இறுதி வரை அவற்றில் வேலைத் திட்டங்கள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த 14 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 15,525,931 தொகை பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொண்டிருக்காமை**

--------------------------------------------------------------------------------------------------

பிரதேச சபை கட்டிடம் 2014 ஆண்டின் போது நிர்மாணிக்கும் போது ரூபா 260,041 தொகைக்கான 13 செலவு விடயங்கள் முற்றாக கைவிடப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட 05 செலவு விடயங்களில் நிறைவேற்றப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 1,787,193 தொகையாக காணப்பட்ட போதிலும், நிறைவேற்றப்படாத வேலைகளின்

பெறுமதி ரூபா 854,147 தொகையாகும். குறிப்பிட்ட நிர்மாண வேலையின் மதிப்பீட்டில் குறிப்பிடப்படாத வேலை விடயங்களுக்காக ரூபா 84,574 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நிர்மாண வேலை நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட வேலையின் பெறுமதியின் மீது ரூபா 1,423,429 இற்கான தொகையும் ரூபா 201,213 இற்கான தடுத்து வைத்தல் மற்றும் விலைகூறல் பிணைமனு விடுவிக்கப்பட்டிருந்தது. 2013 ஆண்டின் போது ரூபா 1,423,429 தொகை செலவிடப்பட்டு அலுவலக கட்டிடத்தின் முதல் மாடியின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டு மீதியான வேலை பூர்த்தி செய்யாமையால் தரை மாடியில் நிலைத்து நிற்பதற்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலையின் மூலம் எதிர்பாத்த நலன்களைப் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலவில் சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

சபைக்கு சொந்தமான 08 தொன்கள் மற்றும் 04 தொன்கள் பாதை தகர்க்கும் இயந்திரங்கள் மீளாய்வாண்டின் போது நாளாந்தம் ரூபா 10,000 செலுத்தும் அடிப்படையில் முறையே 29 நாட்கள் மற்றும் 30 நாட்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் இயந்திரங்கள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக முறையான செயல்முறையொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணித் திட்டத்தில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 10 மிகை பதவியணியை முறைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 13 கனிஷ்ட ஊழியர்கள் உரிய கடமைகளுக்கு புறம்பாக வேறு கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால், கனிஷ்ட சேவையில் கடமைகள் அணவல் செய்வதற்காக சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேர்படியாக ரூபா 1,564,143 இற்கான தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுப்படாமை**

சபைக்கு சொந்தமான 04 காணிகளில் மற்றும் கட்டிடமொன்றில் அங்கீகாரமில்லாத பயிர்செய்வோர் மற்றும் வதிவோர் காணப்பட்ட போதிலும் சபையினால் இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான ரூபா 22,016,131 தொகை பெறுமதியான 15 காணித் துண்டுகளின் உரிமையை மற்றும் அளவுகளை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

### 3.4.3 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

(அ) ரூபா 16,329,104 தொகை பெறுமதியான 05 காணிகள் மற்றும் 05 கடைகள் எதுவித பயன்தரக்கூடிய விடயங்களுக்கு ஈடுபடுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 210,000 பெறுமதியான கைடிரக்டர் மற்றும் ரூபா 281,925 தொகை பெறுமதியான முச்சக்கர வண்டி ஆண்டின் போது ஓட்டப்படாமல் காணப்பட்டதுடன், ரூபா 156,520 தொகை பெறுமதியான மோட்டார் சைக்கிள் 21.5 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடியிருந்தது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் டபள் கப் வண்டி 2017 ஆண்டின் போது 50,270 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்ததுடன், எரிபொருள் செலவாக ரூபா 551,583 தொகை செலவிடப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2017 ஆண்டு மார்ச் மாதத்தில் ஓடிய கிலோ மீற்றர் எண்ணிக்கையில் அதிகார பிரதேசத்தில் கடமைகளுக்காக ஓடிய கிலோ மீற்றர்கள் 837 மாத்திரம் இருந்ததுடன் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக பயன்படுத்திய கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை 2,764 தொகையாகும்.

(ஆ) சபைக்கு சொந்தமான புதிய பெக்கோ இயந்திரத்தின் எரிபொருள் எரிதல் பரிசோதனையின் போது அங்கீகரிக்கப்பட்ட இயந்திர மணித்தியாளங்களில் எண்ணிக்கையை விட 48 மணித்தியாளங்கள் மேலதிகமாக பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 162,833 இற்கான மேலதிக எரிபொருள் செலவு ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 3.6 பெறுகை

### 3.6.1 வழங்கள் மற்றும் சேவைகள்

பிடபெத்தர பிரதேச சபை நடாத்தப்படும் கட்டிடத்தின் மேல்மாடியை நிர்மாணிப்பதற்காகக் குறிப்பிட்ட நிர்மாண வேலையின் ஒப்பந்த வேலைக்காக கூறுவிலை அழைத்தல் மீது உடன்படிக்கை மேற்கொள்ளல் வரையான பெறுகை செய்முறை முறையாக கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 ஒப்பந்த நிருவாகம்

சபைக்குச் சொந்தமான பல்கரும கட்டிடத்தில் நுழைபாதை நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணக்கமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளுக்காக ரூபா 386,029 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 211,815 தொகைக்கான 04 செலவு விடயங்களின் வேலைப்பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 செலவு விடயங்களில் சேமிப்புக்களில் கூட்டுத்தொகை ரூபா 1,739,358 தொகையாகக் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 64 வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 02 வருமான விடயங்களின் அணுகியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,933,480 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 04 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடி இருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 ஜூன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்கு மீளாய்வாண்டு இறுதியிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு